[திரு. நா. இராசாங்கம்] [28th July 1965

எடுத்தாலும், வேகமாக நடவடிக்கை எடுத்தாலும், இந்த ஒரே ஒரு காரணத்தினால் காலதாமதம் ஆகிறது. ஆகவே, இந்தத் துறை அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் கலந்து ஆலோசித்து, தென் ஆற்காடு மாவட்டத்திற்குத் தனியாக ஒரு சூபரிண்டெண்டிங் என்ஜினியர் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மின்சாரத் துறையிலே வேலை செய்யக்கூடிய ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள், 2, 3 ஆண்டுகளுக்கு அதிகமாக வேலை செய்திருந்தாலும் கூட, 5 ஆண்டுகளுக்கு வேலை செய்திருந் தாலும் கூட, வேலையிலிருந்து நீக்கப்பட்டு வெளியே அனுப்பப் பட்டிருக்கிறார்கள். 'டெக்னிகல் டிபக்ட்ஸ்' என்ற காரணத்தினால் அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாவிட்டாலும், விதி முறைகளில் ஏதாவது மாறுதல் செய்து அந்தத் தொழிலாளர் களுக்கு மீண்டும் வேலை கொடுத்து உதவுவதற்கு மின்சார இலாகா வினர் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி வறண்ட பிரதேசம் என்பது எல்லோருக்கும் தெரியும். காடாம்புலியூரைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும். குடிப் பதற்காக இருந்தாலும் சரி, விவசாயம் செய்வதற்காக இருந்தா லும் சரி, கிணற்றிலிருந்துதான் தண்ணீரை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். கிணறுகள் நிறைய அமைந்துள்ள பிரதேசம். அங்கே மின்சாரம் தாராளமாக வழங்க வேண்டும். தாராளமாக மின்சாரம் வழங்கக் கூடிய முறையில் விதிமுறைகளை ஏற்படுத்தி, இப்பொழுது இருக்கிற விதிகளையும் தளர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியிலிருந்து கிழக்கு முகமாக ஓடக்கூடிய ஒரு நீரோடை இருக்கிறது. அதற்கு செங்கால் ஓடை என்று பெயர். ஓடை நெடுக பல கிராமங்களில் விவசாயிகள் கிணறுகளைத் தோண்டி, கிணற்று நீரைக் கொண்டு நிலங்களுக்குப் பாய்ச்சி கொண்டிருக்கிறார்கள். இருக்கிற சில விதிமுறைகளின் பிரகாரம் ஓடைக்குப் பக்கத்தில் தண்ணீரை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று பி.டபிள்யூ.டி. தடை விதித்திருப்பதாகத் தெரிகிறது. அம்மாதிரி இடங்களில் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்கு இந்த இலாகா அனுமதி கொடுத்தால், நல்ல முறையில் விவசாயம் நடக்கும். அப்படிப்பட்ட இடங்களுக்குக் கடுமையாக இருக்கும் விதிகளைக் கொஞ்சம் தளர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன காலனிகளுக்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருப் பதாகத் தெரிகிறது. இது போதாது. 12-ல் ஒரு பாகம் என்று பார்த்தால் கூட, 3 லட்சம் ரூபாயில் 12-ல் ஒரு பாகம் தென் ஆற்காடு மாவட்டத்திற்குக் கிடைத்தால் கூட, அது குறைந்த தொகை. அந்தத் தொகையை வைத்துக் கொண்டு, சர்க்கார் எண்ணத்தில் இருக்கும் விரிவான திட்டத்தை நிறைவேற்ற

28th July 1965] [திரு. நா. இராசாங்கம்]

முடியாது. அந்தத் தொகையைக் கொண்டு எல்லா வேலைகளும் நடந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஹரிஜனக் காலனிகளில் 100-க்கு 50 தெருக்களுக்காவது ஒரு ஆண்டிற்குள் மின்சாரம் வழங்கக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அம்மாதிரி நிலைமை ஏற்படும் என்று நம்புகிறேன். அம்மாதிரி நிலைமையை ஏற்படுத்தும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் துறையில் இருக்கும் தொழிலாளர்களில் 100-க்கு 55 பேர்கள் தான் இதுவரைக்கும் பெர்மனெண்டு செய்யப்பட்டு பென்ஷனுக்கு அருகதையாகியிருக்கிறார்கள். அவர்களுடைய சர்விசைத் தான் சர்க்கார் பென்ஷன் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பாக்கி 45 சதவிகித தொழிலாளர்களின் வேலை அந்த முறையில் காயம் செய்யப்படவில்லை. ஐந்து வருஷம், 10 வருஷம் என்று குறைந்த பட்ச ஆண்டுகளையோ அல்லது அதிகபட்ச ஆண்டுகளையோ நிர்ணயம் செய்து, அந்த நிர்ணய எல்லைக்குள் வருகிற தொழிலாளர்களை நிரந்தர சிப்பந்திகளாகக் கருதவேண்டும், ஒப்புக்கொள்ள வேண்டும். இதில் இந்த இலாகாவினரும், அமைச்சர் அவர்களும் கவனம் செலுத்தி, ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த இலாகா நம்பிக்கைக்குரிய இலாகா என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 1-15 p.m.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

*170. *Notification issued with G.O. Ms. 921, Education, dated the 1st June 1965 approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification, in the area within the jurisdiction of the Gobichettipalayam Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

171. *Notification issued with G.O. Ms. No. 917, Education, dated the 1st June 1965 approving the list of all the parks set out in the schedule of the notification, in the area within the jurisdiction of the Vaniyambadi Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section*

[28th July 1965

3 of the *Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act*, 1959. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act*, 1959 (*Madras Act* 26 *of* 1959).]

172. *Notification issued with G.O. No.* 3163, *Industries, Labour and Co-operation, dated the* 24*th June* 1965, *amending the Madras Weights and Measures (Enforcement) Rules*, 1958, *published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A*-7625 *of* 1958, *dated the* 15*th November* 1958, *at pages* 1 *to* 55 *of Part I of the* Fort St. George Gazette, *Extraordinary, dated the* 1*st December* 1958, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 43 (4) *of the Madras Weights and Measures (Enforcement) Act*, 1958 (*Madras Act* XX *of* 1958).]

B. Reports, Notifications and other papers.

† 23. *Annexure to the Madras Agricultural Income-tax (Amendment) Bill*, 1965.

† 24. *The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill*, 1965 *with annexure.*

* 25. *Notification issued with G.O. Ms. No.* 1081, *Home, dated the* 27*th March* 1965, *amending the Home Department Notification No.* 1380, *dated the* 8*th September* 1939, *published at pages* 1418–1419 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 31*st October* 1939, *as subsequently amended.*

* 26. *Notification issued with G.O. Ms. No.* 972, *Home, dated* 19*th March* 1965 *amending the Madras Traffic Rules*, 1938, *published with Home Department Notification No.* 400, *dated the* 31*st March* 1938, *at pages* 34 *to* 36 *of the* Fort St. George Gazette, *Extraordinary, dated the* 1*st April* 1938, *as subsequently amended, the same having been previously published as required by section* 3 *of the Madras Traffi Control Act*, 1938 (*Madras Act V of* 1938).

27. *List of Unstarred Questions and Answers from numbers* 1 *to* 8

* 28. 36*th Annual Administration Report* 1962–63 *of the Madras* State Electricity Board.

* 29. *Statement showing the action taken on the suggestions made by the Members of the Madras Legislature during the discussions on the Annual Financial Statement of the Madras State Electricity Board for the year* 1964–65 (*English and Tamil*).